வலியுறுத்தி இருக்கிறார்கள். நான் நேரிடையாகப் பார்வையிட்டதற்கு பிறகு அங்கே படகுகள் விடலாமா, எவ்வளவு எண்ணிக்கையில் சுற்றுலாப் பயணிகள் வருவார்கள் என்பதையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு பேசி அதற்கு பிறகு நல்ல முடிவு மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 550, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

550—

கொடுமுடியில் இரயில்வே மேம்பாலம் கட்டும் திட்டம்.

*12245—திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கொடுமுடி பேரூராட்சியில் பொதுமக்கள் நலனுக்காக இரயில்வே மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ் கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திட்டம் ஏதும் இல்லை.

திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இல்லையென்ற பதிலை இரண்டாவது முறையாக இந்தப் பேரவையில் எடுத்து வைத்திருக்கிறார்கள். நானும் மூன்றாவது முறையாக நன்றே செய்க அதையும் அன்றே செய்க என்பதற்கு எடுத்துக்காட்டாக ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிற புரட்சித்தலைவி அவர்களுடைய ஆட்சியில் மூன்றாவது முறையாகவும் இந்தக் கோரிக்கையை வைத்து கொடுமுடி மாநகர் ஒரு புண்ணியத் தலமாக ஒரு சுற்றுலா மையமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. 3½ லட்சம் மக்கள் தொகையை கொண்ட நகராக இருக்கிறது. கிட்டத்தட்ட 10 லட்சம்

பக்தர்கள் கொடுமுடித் தீர்த்தத்தை எடுத்து பழனிக்குச்செல்லக் கூடிய ஒரு முக்கியத் தலமாக கொடுமுடி திகழ்ந்து கொண்டிருக்கிறது. இந்த பாலமானது, இராமேஸ்வரம் எப்படி பாம்பன் பாலம் போக்குவரத்து இல்லாத போது ஒரு தனித் தீவாகக் காட்சி அளித்ததோ அதைப் போல கொடுமுடி ஒரு தனித் தீவாக காட்சி அளித்துக் கொண்டிருக்கிறது. அந்த நிலையை மாற்றி மக்களுக்கு வாழ்வளிக்க வேண்டும். மருத்துவமனை, பள்ளிக்கூடங்கள், அலுவலகங்கள் அத்தனையும் பாலத்தைத் தாண்டி இருக்கிற காரணத்தால் இடைவிடாது 20 மணி நேரம் புகைவண்டிகள் அந்தப் பக்கமாக போய் ரெயில்வே கேட் மூடியிருக்கிற காரணத்தால் மக்கள் மிகவும் துன்பத்திற்கு ஆளாகிறார்கள். எனவே, எதையும் ஆற்றலோடு செய்யக்கூடிய திறம்படைத்த நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய நன்மதிப்பிற்குரிய நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் எங்களுடைய தொகுதியின் மீது கருணை கொண்டு எங்களுடைய மக்களின் மீது இரக்கம் கொண்டு அடுத்த ஆண்டிலாவது இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நல்ல காரியங்களை இன்றே செய்வதில் இந்த அரசுக்கு எந்தவிதத் தயக்கமும் கிடையாது. ஆனால் இந்த மேம்பாலங்களை அமைக்கின்றபோது நாம் பாதித் தொகையையும் மத்திய அரசின் ரயில்வே நிர்வாகம் பாதித் தொகையையும் கொடுக்கிறர்கள். அப்படி வருகிறபோது ஏறத்தாழ 3 கோடி ரூபாய் வருகிறது. எனவே இங்கே இருக்கிற பிரச்சினையே நிதிப் பிரச்சினைதான். ஏராளமான மேம்பாலங்களைக் கட்டவேண்டும் என்று நம்மிடத்திலே குறிப்புகள் இருக்கின்றன. மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறோம். இந்தக் குறிப்பைப் பார்க்கிறபோது கொடுமுடியைப் பொறுத்தவரையில் இந்தப் பிரச்சினை மிகவும் சிக்கலான பிரச்சினை என்பதை அதிகாரிகள் குறிப்பிலே தெரிவித்திருக்கிறார்கள். மிக முக்கியமாகக் கட்டப்பட வேண்டும் என்றுதான் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு என்று சில நார்ம்ஸ் வைத்திருக்கிறார்கள். Train-vehicles-Unit என்ற ஒரு கணக்கை வைத்திருக்கிறார்கள். அப்படி வருகிறபோது அந்த அளவு எல்லாம் வந்தால் தான் இந்தப் பாலத்தை நாம் சேர்க்க முடியும். இருந்தாலும் நம்முடைய அரசின் மூலமாக செய்கின்ற காரிய

1993 ஏப்ரல் 30]

மாக இருந்தால், உடனடியாக அதற்கான நடவடிக்கைகளை எடுத்துவிடலாம். ரயில்வே நிர்வாகத்துடன் தொடர்புடைய பிரச்சினையாக இருக்கிற காரணத்தாலே இது சம்பந்தமாக ரயில்வே நிர்வாகத்தோடு பேசி என்ன முடிவு எடுக்கலாம் என்பதை இந்த அரசு ஆராயும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு இந்த ஆண்டிலே நிதி இல்லை என்று சொன்னாலும்—நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவியினுடைய தொகுதிக்கு ஒரு பாலம், அதற்கு 5 லட்சம் ரூபாய் என்று ஒதுக்கி இருக்கிற அந்த நிதியை நாம் ரயில்வேவிற்கு சரண்டர் செய்தோமானால், அவர்கள் இந்தப் பாலத்திற்கு அருகிலே ஒரு சிறிய நுழைவு பாலத்தைக் கட்டித் தருவதாகவும் அதன் மூலம் இந்தப் பாலப் பிரச்சினையைத் தீர்ப்பதாகவும், ரயில்வே அதிகாரிகள் நான் நேரிலே சென்று அவர்களிடம் விசாரித்தபோது சொன்னார்கள். இந்த 5 லட்ச ரூபாயை ஒதுக்கி, தொகுதிக்கு ஒரு பாலத்தைத் தரக்கூடிய புரட்சித் தலைவியினுடைய அரசிலே இந்தப் பாலத்தைக் கருத்திலே கொண்டு இந்த 5 லட்ச ரூபாயை வேறு திட்டப் பாலங்களுக்கு பயன்படுத்தாமல்,—இந்த மேம்பாலத்தை 3 கோடி ரூபாய் அளவிலே, கட்டுவதற்கு இயலாவிட்டாலும்-அருகிலே கட்டித் தருவதற்கு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், அந்தத் தொகுதிக்கு உரிய 5 லட்சம் ரூபாயை மத்திய அரசிடம் ஒப்படைத்து, அதன் மூலமாக எங்களுக்கு ஒரு சிறிய பாலத்தை உடனடியாக போர்க்கால நடவடிக்கையாக, மக்கள் வாழ்வதற்கு கட்டித் தருவதற்கு சிபாரிசு செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய யோசனையை ஏற்றுக் கொள்ளலாம். அப்படிப்பட்ட பிரச்சினை இருக்கிறது என்று தெரிவிக்கிற காரணத்தாலே அதைப்பற்றி ரயில்வே நிர்வாகத்தோடு கலந்து பேசி, உடனடியாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். அதிலே எந்தவிதமான பிரச்சினையும் இருக்காது. ஆகவே, அவர்கள் எழுத்து மூலமாக இந்தக் கருத்தைத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உடனடியாக அதன் மீது நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 551, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

551—

குரைண்டி—நுகத்தூர் கிராமங்களில் முடிகொண்டான் ஆற்றுப்பாசனம்.

*14006—திரு. ஜி. பழனிசாமி :

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் காவிரி வளர்ச்சிப் பணி கோட்டத்தால் முடிகொண்டான் ஆற்றிலிருந்து குரைண்டி—நுகத்தூர், சகடமங்கலம் ஆகிய கிராமங்கள் பாசனம் பெற மதிப்பீடு தயார் செய்யப்பட்ட திட்டத்தினை நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வினாவில் குறிப்பிட்டுள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்ட திட்டத்தை 1992-93 ஆம் ஆண்டுக்கு எடுத்துக்கொள்ள ஒட்டுமொத்த பட்டியலில் உத்தேசிக்கப்பட்டிருந்தது. ஆனால் நிதி நிலை காரணமாக இப்பணிக்கு இன்னும் அரசு ஒப்புதல் அளிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் காவிரி வளர்ச்சிப் பணிக் கோட்டத்தின் மூலமாக முடிகொண்டான் ஆற்றிலிருந்து குரைண்டி, நுகத்தூர், சகடமங்கலம் ஆகிய கிராமங்களுக்கு பாசன வசதிக்காக சென்ற ஆண்டு விடப்பட்டு இருந்தாலும், இந்த ஆண்டாவது-அந்தப் பகுதியினுடைய விவசாயிகள் பாசன வசதியின்றி, சிரமத்தோடு, இருக்கிறார்கள், காலத்தோடு தண்ணீர் போய் அந்தக் கிராமங்களுக்குச் சேருவதில்லை. ஒவ்வொரு ஆண்டும் அனேகமாக சிரமத்திற்குள்ளாகித்தான் அவர்கள் சாகுபடி செய்கிறார்கள். கடைசிக் கட்டமாகத்தான் அந்தத் தண்ணீர் கிராமத்திற்குள்ளே போக்கூடிய நிலமை ஏற்படுகிறது. எனவே, இந்த ஆண்டாவது—அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து, அந்த ஆறுகளை ஆழப்படுத்தி பாசன வசதி செய்து கொடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.